In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : SC.12/2022
Deposition of P.W.1
****

Name திரு.சுரேஷ்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 10th day of February 2025.

**Accused present.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சிவகளையில் குடியிருந்து வருகிறேன். நான் பள்ளி ஆசிரியராக பணிபுரிந்து வந்திருந்த நிலையில் இந்த விபத்து ஏற்பட்ட பிறகு என்னால் தொடர்ச்சியாக பணிபுரிய முடியாத காரணத்தினால் இந்த வேலையை விட்டு விட்டு தற்போது விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 08.09.2018 அன்று இரவு நான் ஏரலில் இருந்து தெற்கிலிருந்து வடக்காக பெருங்குத்தை நோக்கி நானும், மற்றொருவரும் அவர் வண்டி ஓட்ட நான் பின்னால் உட்கார்ந்து வந்து கொண்டிருந்தோம். அந்த வாகனம் அதை ஓட்டி வந்த சுரேஷக்கு சொந்தமானது. அவர் என்னுடைய மாமா ஆவார். சுமார் 9.45 மணியளவில் வேலை முடிந்து வந்து கொண்டிருந்த போது பின்னால் இருந்த 407 வாகனம் வேகமாக வந்து நாங்கள் சாலையில் வேகத் தடை மீது எங்கள் வண்டி ஏறி இறங்கிக் கொண்டிருக்கும் போது எங்கள் வண்டிக்கு பின்னால் இடித்தது. மோதிய வாகனத்தின் எண் TN 31 AZ 5844 ஆகும். நாங்கள் வண்டியை ஒதுக்கி நின்ற போது வேகமாக வந்த 407 வாகனம் வேகத்தடையில் ஏறி இறங்கி எங்கள் மீது மோதியது. அந்த சமயத்தில் ஏரல் காவல் நிலைய ஆய்வாளர் திரு.பட்டாணி அவர்களின் டாடா சுமோ அரசு வாகனத்தில் வந்து

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.02.10 13:32:24 +0530

கொண்டிருந்தார். அந்த வண்டி மீதும் 407 வாகனம் மோதியது. அந்த விபத்தினால் எனக்கு தலையில் 18 தையல்களும், வலது காலில் முறிவும், தோள்பட்டையில் அடியும் அங்கங்கே சிராய்ப்பும் ஏற்பட்டது. அதனால் என்னை ஏரல் அரசு மருத்துவமனையில் கொண்டு வந்து , அங்கு முடியவில்லை என்று சொன்னதால் தூத்துக்குடி மாவட்ட அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தனர். என்னுடன் வந்த என்னுடைய மாமாவிற்கும் நெற்றி மற்றும் கண் அருகேயும், இடது கணுக்காலில் முறிவும் ஏற்பட்டது. சரவணன், முருகேசன் மற்றும் மாரி ஆகியோர் எங்களை மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தனர். அவர்கள் ஏரல் தாமிரபரணி ஆற்றிலிருந்து 407 வண்டியில் மண் கடத்தி வந்ததால் வேகமாகப் போக வேண்டும் என்ற எண்ணத்தில் வண்டியை ஓட்டி வந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டு எங்கள் மீதும் மோதினார்கள். நான் ஆஸ்பத்திரியில் இருந்த போது ஏரல் காவல் நிலையத்திலிருந்து 2 ஏட்டையா வந்து என்னிடம் விசாரித்தார்கள். நான் நடந்ததை எழுத்து மூல புகாராக எழுதிக் கொடுத்தேன். அதில் உள்ளது என் கையெழுத்து தான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் நான் கொடுத்த புகார் மனு ஆகும். அது அ.சா.ஆ.1. அந்த வாகனத்தை முன்னிலைப்படுத்தினால் தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 3 புகைப்படங்களில் இருப்பது அந்த வாகனம் தான். அந்த 3 புகைப்படங்களும் அ.சா.ஆ.2 ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>**குறுக்குவிசாரணை :**</u>

என்னை சம்பவ இடத்திலிருந்து ஏரல் அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் அழைத்துச் சென்றனர் என்ற விபரத்தை என்னுடைய புகாரில் எங்கேனும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனக்கும் சுரேஷ்க்கும் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவரிடம் தெரியாத ஒரு வாகனம் மூலமாக எங்களுக்கு விபத்து ஏற்பட்டதாக தெரிவித்திருந்தோம் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது 10.09.2018 அன்று தான் விபத்து நடந்து இரு தினங்கள் கழித்து தான் என்னிடம் புகார் பெறப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பாகவே காவல் துறையினர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டனர் என்றால் சரிதான். என்னிடமிருந்து புகார் மனு எழுதி வாங்கும் சமயத்தில் போலீசார் தான் எனக்கு வாகனப் பதிவெண் மற்றும்

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.02.10 13:32:32 +0530

எதிரிகளின் விபரங்களை தெரிவித்தனர் என்றால் சரிதான். இந்த விபத்தின் போது எங்களை மோதிய வாகனம் வேகமாக வந்து எங்கள் மீது மோதியதால் நாங்கள் இருவரும் பள்ளத்திற்குள் தூக்கி எறியப்பட்டோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் சம்பவ இடம் இருட்டாக இருந்ததால் எனக்கு தலையில் எதன் மீது மோதி காயம் ஏற்பட்டது என்று தெரியவில்லை. நான் கொடுத்த புகார் மனுவில் எனது மாமா தான் நாங்கள் வந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்ததாக சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த பிறகும் நாங்கள் இருவரும் சுயநினைவோடு தான் இருந்தோம். எங்களை அங்கு வந்த ஏரல் காவல் நிலைய ஆய்வாளர் தான் காப்பாற்றினார் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவில் அந்த ஆய்வாளர் தான் எங்களைக் காப்பாற்றினார் என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஏன் குறிப்பிடவில்லையென்றால் போலீசார் குறிப்பிட வேண்டாம் என்று சொன்னதால் குறிப்பிடவில்லை. காவல் துறையினர் சொன்ன படி தான் நான் புகார் மனுவை எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள வாகனத்தின் மூலமாகத்தான் எங்களுக்கு விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் சொல்லிக் கொடுத்தபடி வாகன எண் குறித்தும் எதிரிகளின் பெயரும் குறிப்பிட்டேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சாட்சியங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.02.10 13:32:39 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தூத்துக்குடி.